## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S.No. 264/2023 | Date : 07.07.2026 | PW 1 |
|---|---|---|
| Name: லட்சுமி | க/பெ. அய்யனார் | |

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகப்பிரிவினை கோரி வழககு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து ஜலகண்டாபுரத்தில் தோரமங்கலம் கிராமத்தில் 6 மற்றும் 7 வது வார்டில் அமைந்துள்ளது. எந்த சர்வே எண் எந்த பட்டா எண்ணில் அமைந்துள்ளது என்றால் அது குறித்து தெரியாது. 1973 மற்றும் 1979 யில் எனது தகப்பனார் பெருமாள் பெயரில் கிரயம் பெற்ற சொத்தாகும். 1ம் பிரதிவாதி எனது தாயார் 2ம் பிரதிவாதி எனது மூத்த சகோதரி 3, 4 பிரதிவாதிகள் என்னுடைய மூத்த சகோதரர்கள் என்றால் சரிதான். எனக்கு 12.5.1999 யில் திருமணம் நடைபெற்றது. தொளசம்பட்டியில் உள்ள ஊ.மாரமங்கலம் கிராமத்தில் திருமணம் செய்து கொடுத்தார்கள். என் கணவர் சேலம் தனியார் கம்பெனியில் வேலை செய்கிறார். நாங்கள் தாரமங்கலத்தில் 20 வருடமாக வாடகை வீட்டில் வசித்து வருகிறோம். மேற்படி ஊ.மாரமங்கலத்தில் புறம்போக்கு 10 செண்ட் நிலம் உள்ளது. அது என் மாமனார் பெயரில் உள்ளது. நான் சொல்வது பொய் என்றும் 3 ஏக்கர் விவசாய நிலம் மற்றும் வீடுகள் தென்னந்தோப்பு உள்ளது என்றால் சரியல்ல. என் கணவருக்கு மாதம் ரூ.60,000/– வருமானம் வருகிறது என்றால் சரியல்ல. என் அக்கா மணிமேகலைக்கு திருமணமாகி 30 வருடங்கள் இருக்கும் என்றால் சரிதான். அவர் கணவருடன் வாழாமல் என் அப்பா வீட்டிற்கு வந்துவிட்டார் என்றால் சரிதான். அவருக்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான் என் அண்ணன் சண்முகத்திற்கு திருமணமாகி 3 குழந்தைகள் உள்ளனர் என்றால் சரிதான். என் சகோதரர் ராமனுக்கு கால ஊனம் என்றால சரிதான். அவருக்கு திருமணமாகி ஒரு மகன் உள்ளார் என்றால் சரிதான். மேற்படி அனைவரும் நான் 1வது அயிட்டமாக காண்பித்துள்ள தாவா சொத்தில்ான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 2 வது அயிட்ட சொத்து காலியிடம் என்றால் சரிதான். எனக்கு திருமணமானபோது எனது அப்பா சுமார் 20 பவுன் நகை சீர்வரிசை பொருட்கள் கொடுத்தார் என்றால் சரியல்ல. என் அப்பா 2004ம் வருடம் எனக்கும் என் கணவருக்கும சேர்ந்து ஜலகண்டாபுரத்தில் ஒரு காலிமனை வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி காலிமனை தாவா சொத்திற்கு அருகில் உள்ளது என்றால் சரிதான். அந்த நிலத்தில் என் அப்பா ரூ 10 லட்சம் செலவு செய்து வீடு

கட்டி கொடுத்தார் என்றால் சரியல்ல. நாங்கள்தான் வீடு கட்டினோம். அந்த வீட்டில்தான் நாங்கள் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். 1வது அயிட்ட சொத்தில் முதலில் என் அப்பா கீழ் தளம் மட்டும் கட்டினார் என்றால சரிதான். என் அப்பா பணி ஓய்வு பெற்று வந்தபிறகு மேல்மாடியை கட்டினார்.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

ஒம்/—லட்சுமி

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.